பக்கங்கள்:09 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 23 வியாழக்கிழமை 09.12.2021 கதிர் 34

**இது ரகசியம் அல்ல!**

“நாட்டின் பொருளாதாரம் மீளவே முடியாத சரிவை நோக்கிச் செல்கின்றது. நாட்டை பேராபத்து சூழப்போகின்றது. யாரும அது குறித்து அலட்டிக் கொள்கின்றார்கள் இல்லை” – தென்னிலங்கையின் மூத்த ஊடக நண்பர் ஒருவர் மிகுந்த கவலை

பக்கம்02

# பாகிஸ்தான் போல் இலங்கையிலும் அரச அனுசரணையில்கூட கொடூரம்

## தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்டு எரிக்கப்பட்டதை மறக்கவேமாட்டோம் என்று சாணக்கியன் தெரிவிப்பு



பாகிஸ்தானில் நடந்ததுபோல் இலங்கையிலும் பல சம்பவங்கள் நடந்துள்ளன. அதுவும் அரச அனுசரணையில் கூட தமிழர்களுக்கு எதிராக கொடூரங்கள் இடம்பெற்றுள்ளன என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

2

## பாகிஸ்தான் சம்பவத்துடன் இலங்கையை ஒப்பிடாதீர்!

### சாணக்கியனுக்கு விமல் பதிலடி



இலங்கையில் நடைபெற்ற சம்பவங்களுடன் பாகிஸ்தானில் நடந்த சம்பவத்தை ஒப்பிட்டு, இரண்டையும் சமப்படுத்த முற்படவேண்டாம் என்று அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று சாணக்கியன் எம்.பி. வெளியிட்ட கருத்துக்குப் பதிலடி கொடுக்கும் விதத்திலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

சிற்சில அரசியல் முரண்பாடுகளால்

2

## யுகதனவி ஒப்பந்தத்தை உடன் நாடாளுமன்றில் முன்வைக்குக!

### ரணில், அநுர வலியுறுத்து



கெரவலப்பிட்டிய யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தின் 40 வீத பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்கும் உடன்படிக்கை இன்னும் சபையில் முன்வைக்கப்படவில்லை. எனவே, அது உடனடியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

–இவ்வாறு

2

## சபாநாயகருடன் சீனத் தூதுவர் நேற்று நேரில் முக்கிய சந்திப்பு



இலங்கைக்கான சீனத் தூதுவர் ஷீ ஜன்ஹொங், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை நேற்று சந்தித்தார்.

நாடாளுமன்றக்கட்டடத்தொகுதியில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் சீனா மற்றும் இலங்கைக்கிடையிலான

2

## முன்னாள் போராளிகள் பிச்சை எடுக்கும் அவலம்

### நாடாளுமன்றத்தில் அரசு மீது செல்வம் எம்.பி. குற்றச்சாட்டு



புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு உரிய வசதிகளை அரசு செய்து கொடுக்கவில்லை. இதனால் பலருக்குக் கையேந்தி பிச்சையெடுக்கவேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்

2

**மருத்துவபீட மாணவன் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம்;**

## முன்கூட்டியே தகவல் வெளியானமை குறித்து அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவு



யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவன் மரணம் தொடர்பில் முன்கூட்டியே தகவல் வெளியானமை தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ்.நீதிமன்ற நீதவான் ஏ.பி. போல் கோப்பாய் பொலிஸாருக்கு உத் தரவிட்டுள்ளார்.

மாதாகோவில்வீதி, துன்னாலை வடக்கு பகுதியைச் சேர்ந்த யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மூன்றாம்

2

## காரைநகர் சபையின் ‘பட்ஜட்’ தோற்கடிப்பு

### தவிசாளர் பதவியைக் கைப்பற்ற தமிழ்க் கூட்டமைப்பு கடும் முயற்சி

(ந.லோகதயாளன்)


காரைநகர் பிரதேச சபையில் கடந்த மாதம் 10ஆம் திகதி ஈ.பி.டி.பியின் ஆதரவுடன் சுயேச்சைக் குழு ஆட்சி அமைத்த நிலையில் நேற்று சமர்ப்பிக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்டம் தோல்வியடைந்தது.

11 உறுப்பினர்களை மட்டுமே கொண்ட காரைநகர் பிரதேச சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும்

2

# இந்திய முப்படைத் தலைமைத் தளபதி குன்னூரில் ஹெலி விபத்தில் உயிரிழப்பு

## தமிழகத்தில் நேற்று முற்பகல் சம்பவம்; பயணித்த 14 பேருமே பலி என்று தகவல்



இந்திய முப்படைகளின் தலைமைத் தளபதி பிபின் ராவத் உள்ளிட்டவர்கள் பயணித்த இராணுவக்ஹெலிக்கொப்டர் விழுந்து நொருங்கியுள்ளது.

தமிழகத்தில் நீலகிரி மாவட்டம் குன்னூர் பகுதியில் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் நடந்த இந்த விபத்தில் அதிலிருந்த 14 பேருமே உயிரிழந்தனர்.

ஹெலிக்கொப்டரில் முப்படையின் தலைமைத் தளபதி, அவரது மனைவி, உதவியாளர்கள், மெய்க்காவலர்கள் உட்பட 14 பேர் பயணித்துள்ளனர்.

அவர்கள் 14 பேரும் உயிரிழந்துள்ளனர் என்று தகவல் வெளியாகியுள்ளது.

விபத்துக்கான காரணம் குறித்து விசாரணைகள் நடத்தப்படும் என்று இந்திய விமானப்படை தெரிவித்துள்ளது.

இந்த விபத்தில் படுகாயமடைந்த நிலையில் இருவர் மீட்கப்பட்டனர். எனினும் அவர்களும் பின்னர் உயிரிழந்தனர் என பின்னர் தெரிவிக்கப்பட்டது.

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யுடன் இதைக் கூறினார்.

நாடு வங்குரோத்து (Bankruptcy) நிலையை அடையப் போகின்றது, அடையப் போகின்றது என சுதந்திரம் அடைந்த நாள் முதல் விமர்சித்து வருகிறோம். அது அரசியலில் பேச்சளவில் சொல்லப்பட்டது. அதை நாடு எட்டுவதற்கு வருடக் கணக்கு, மாதக் கணக்கு அல்ல, இனி மேல் வாரக் கணக்குகளே உள்ளன என்று அவர் விசனத்தோடு குறிப்பிட்டார்.

உண்மை நிலைமை மிக மோசமானது. அதை உணராமல் எல்லோரும் – எதிர்க் கட்சியினர் உட்பட எல்லோரும் – வாயால் பேசிக் கொண்டிருக்கின்றனர், சுடப்போகும் யதார்த்த நிலைவரத்தை சரி வர உணராமல் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த வருடம் முடியும் போது – இன்னும் மூன்று வாரங்களில் – நிலைமை கட்டுக்கடங்காத மோசமான கட்டத்தை அடையும். இதுவரை தான் பட்ட கடன்களுக்கான தவணைக் கட்டணங்களை புதுக் கடன்களைப் பட்டாவது செலுத்தி வந்த நாடு, ஜனவரியுடன் கடன் இறுக்க முடியாத நாடாக அறிவிக்கப்படுவது தவிர்க்க இயலாததாகும்.

அந்நியசெலாவணி அடியோடு கரைந்து விட்டது. புதிதாக வெளிநாட்டு நாணய வருமானம் அரசுக்குக் கிட்டுவது துர்லபமாகவே தென்படுகின்றது.

அத்தியாவசியப் பொருள்கள், மருந்துகள், எரிபொருள் போன்றவற்றுக்குத் தட்டுப்பாடும், பற்றாக்குறையும் தவிர்க்க இயலாததாகும்.

ஏதேனும், பெரிய நாடு ஒன்று தாராளத்தோடு முன்வந்து கைகொடுத்து உதவினாலன்றி இலங்கை மீளவே முடியாது என்ற நிலைமை உறுதியாகி விட்டது என்று குறிப்பிடும் அவர், அதுவும் நல்லதற்குத் தான் எனவும் சொன்னார்.

ஏன் என்று கேட்டேன்.

தேசியப் பிரச்சினை, பொருளாதாரக் கொள்கைப் போக்கு, நிதிக் கையாள்கை, ஆட்சி முறைமை போன்றவற்றில் ஒழுங்குக் கட்டுபாடின்றி எதேச்சாதிகாரமாகவும், பொறுப்பின்றித் திமிராகவும் செயற்படும் ஆட்சித் தரப்புக்கு, இத்தகைய நெருக்கடிகளில் இருந்து மீளுவதற்கு உதவும் போது, மேற்படி விடயங்களில் நேர்சீர் முறைமையை பின்பற்றும்படி உதவும் தரப்புகள் நிச்சயம் நிபந்தனை விதிக்கும். பொருளாதார விவகாரங்கள் கழுத்தை திருகி நிற்பதால் அவற்றிலிருந்து மீளுவதற்காக அத்தகைய நிபந்தனைகளுக்கு ஆட்சித் தரப்பு கட்டுப்பட்டுச் செயற்படுவதைத் தவிர வேறு வழி இருக்காது. தேசியப் பிரச்சினைக்குக் கூட நியாயமான தீர்வு ஒன்றுக்கு இணங்கும் கட்டாயம் நிச்சயம் வரும் என்றார் அவர்.

"Blessing in disguise" (துரதிஷ்டத்திலும் ஆசீர்வாதம்) என்பது இதைத் தானோ....?

* * *

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியில் அமைச்சரவைக் கூட்டுப் பொறுப்பு என்பது ஏளனத்துக்குரியதாக மாறியிருக்கின்றது.

கெரவலப்பிட்டிய 'யுகதனவி' வலு உற்பத்தி நிலையத்தின் பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு மாற்றியமையை ஆட்சேபித்து உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றமை தெரிந்ததே.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார, ஜே.வி.பியின் முன்னாள் எம்.பிக்கள் சுனில் ஹந்துன்நெத்தி, வசந்த சமரசிங்க, கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித், வண. எல்லே குணவன்ஸ தேரர் போன்றோர் இந்த மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

இவ்விவகாரம் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயம் என்பதால் உயர்நீதிமன்றத்தின் முழுமையான ஆயத்தின் முன்னால் விசாரிக்கப்படுவதே பொருத்தமானது என சட்டமா அதிபர் கருத்துத் தெரிவித்தமைக்கு இணங்க, ஐந்து நீதியரசர்களைக் கொண்ட உயர்நீதிமன்றத்தின் முழு ஆயத்தின் முன்னால் வரும் 16 மற்றும் 17ஆம் திகதிகளில் இந்த மனுக்கள் விசாரணைக்கு வருகின்றன.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர்கள் புவனேக அலுவிஹார, பிரியந்த ஜயவர்த்தனா, விஜித் மலல்கொட, எல்.ரி.வி.தெல்தெனிய ஆகியோர் இந்த மனுக்களை விசாரிக்கவுள்ளனர்.

பிரதமர் உட்பட முழு அமைச்சரவைக்கும் எதிராக இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

ஆனால், முழு அமைச்சரவையில் மூன்று அமைச்சர்களைத் தவிர்த்து ஏனையோருக்காகவே சட்டமா அதிபர் முன்னிலையாவார் என உயர்நீதிமன்றுக்கு சட்டமா அதிபர் சார்பில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

அமைச்சர்கள் விமல் வீரவன்ஸ, உதய கம்மன் பில்ல, வாசுதேவ நாணயக்கார ஆகியோரே தங்களுக்காக சட்டமா அதிபரை முன்னிலையாக வேண்டாம் என்று கோரியிருக்கின்றார்கள். தங்களின் சார்பில் தனியான – பிரத்தியேக – சட்டத்தரணிகளை நியமிக்கும் 'புரொக்ஸி' படிவங்களில் நேற்று அவர்கள் ஒப்பமிட்டிருக்கின்றனர்.

இந்த ஏற்பாட்டின் பிரகாரம் –

மேற்படி அடிப்படை உரிமை மனுக்களின் மனுதாரர் தரப்பு வாதத்துக்கு எதிராக அமைச்சரவை சார்பில் சட்டமா அதிபர் தரப்பு முன்னிலையாகி வாதிடும். அதே வேளை மேற்படி மூன்று அமைச்சர்கள் சார்பிலும் வேறு பிரத்தியேக சட்டத்தரணிகள் முன்னிலையாகி மனுதாரர் தரப்பின் வாதங்களை ஒட்டி வாதிடும்.

இன்னும் விளக்கமாகக் சொல்வதானால், அமைச்சரவைக் கூட்டுப் பொறுப்புக்கு மாறாக, உயர்நீதிமன்றத்தில் மேற்படி மூன்று அமைச்சர்கள் 'ஸேம்சைட் கோல்' அடிப்பார்கள். அதைப் பார்த்திருப்பதைத் தவிர, நாட்டின் தலைவருக்கு – அமைச்சரவையின் தலைவருக்கு – வேறு நாதியே இருக்காது.

என்னே, அமைச்சரவை இது...?

– மின்னல் –

## பாகிஸ்தான் சம்பவத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஏற்பட்ட சில சம்பவங்கள் இங்கு இடம் பெற்றுள்ளன. அதாவது விடுதலைப்புலிகள் வடக்கில் இராணுவத்தைக் கொல்லும்போது, அதனால் கொதிப்படைந்த தெற்கு மக்கள் குழப்பமடைந்திருக்கலாம். அதேபோல் யாழ். நூலகம் எரிப்பு உள்ளிட்ட சம்பவங்கள் அரசியல் பிளவுகளால் திட்டமிட்ட அடிப்படையில் இடம்பெற்றன.

ஆனால், பாகிஸ்தானில் நடந்த சம்பவம் அவ்வாறு அல்ல. சுவரில் இருந்த போஸ்டரை அகற்றியதால் அந்த நபரைக் கொடூரமாகக் கொன்றுள்ளனர். இலங்கையில் நடந்தவை சரியென நான் கூற விழையவில்லை. ஆனால், இரண்டையும் ஒப்பிட்டு சமப்படுத்த முற்பட வேண்டாம்.

சாணக்கியன் நீங்கள் கண்டியில் படித்த எம்.பி., கண்டி மக்கள் உங்களுடன் எப்படிப் பழகினார்கள் என்பது உங்களுக்கு நினைவிருக்கலாம். எனவே, நியாயமாக உரையாற்றுங்கள் – என்றார்.

## யுகதனவி ஒப்பந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க நேற்று சபையில் வலியுறுத்தினார்.

திறைசேரி செயலாளருக்கும், அமெரிக்க நிறுவனத்துக்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை சபையில் சமர்ப்பிக்கப்படும் எனக் கூறப்பட்டது. ஆனால், இன்னும் சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே, அதனைச் சமர்ப்பிக்குமாறு சபாநாயகர் கோரிக்கை விடுக்கவேண்டும் என்றும் அநுரகுமார எம்.பி. குறிப்பிட்டார்.

அதேவேளை, நாடாளுமன்றத்துக்கே நிதி அதிகாரம் உள்ளது. எனவே, உடன்படிக்கையை சமர்ப்பிக்குமாறு நிதி அமைச்சருக்கு அறிவிக்குமாறு சபாநாயகரிடம் ரணில் விக்கிரமசிங்க, லக்ஷ்மன் கிரியல்ல ஆகியோர் கோரிக்கை விடுத்தனர்.

## சபாநாயகருடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இரு தரப்பு உறவுகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. இலங்கை மற்றும் சீனாவுக்கிடையிலான உறவில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது எனத் தகவல்கள் வெளியாகும் நிலையிலேயே இந்தச் சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

## பாகிஸ்தான் போல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:–

பாகிஸ்தானில் இலங்கையர் ஒருவர் கொடூரமாகக் கொல்லப்பட்டுள்ளார். இந்தச் சம்பவத்தை நாம் கண்டிக்கின்றோம். தோழர் பிரியந்த குமாரவின் குடும்பத்தாருக்கு அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பாகிஸ்தானில் நடந்த சம்பவத்தை இலங்கையிலுள்ள இளைஞர்கள் கண்டிக்கின்றனர். அனுதாபம் தெரிவிக்கின்றனர். இலங்கையிலும் இப்படியான பல சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

1956, 1958 காலப்பகுதியில் அரச அனுசரணையுடன் தமிழர்கள் மீது தாக்குதல்கள் இடம்பெற்றன. தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்டனர். கறுப்பு ஜூலையின் போதும் தமிழ் இளைஞர்கள் கொடூரமாகக் கொல்லப்பட்டனர். அவை தொடர்பான படங்களும் உள்ளன. இந்தக் கொடூர சம்பவங்களை நாம் மறக்கவேமாட்டோம் – என்றார்.

## முன்னாள் போராளி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:–

புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு சிறு கைத்தொழில் அல்லது வங்கிக் கடன் ஊடாகத் தொழில் வாய்ப்பு வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது. அந்த உறுதிமொழி நிறைவேற்றப்படவில்லை.

இன்று வறுமையால் அவர்கள் மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளனர். புனர்வாழ்வு பெற்ற சிலர் தற்கொலை செய்தும்கொண்டுள்ளனர். பலர் கையேந்தி பிச்சையெடுக்கும் அவல நிலைமை ஏற்பட்டுள்ளது. எனவே, வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றுங்கள் – என்றார்.

## காரைநகர் சபை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சுயேச்சைக் குழு என்பன தலா 3 உறுப்பினர்களைக் கொண்டிருந்த நிலையில் 2018ஆம் ஆண்டு கூட்டமைப்பு ஆட்சியைக் கைப்பற்றியது. இதன்போது தேர்வான தவிசாளர் இந்த ஆண்டு மரணமடைந்தமையால் கடந்த 10ஆம் திகதி மீண்டும் தவிசாளர் தேர்வு இடம்பெற்ற வேளை தவிசாளர் பதவி சுயேச்சைக் குழுவின் வசமானது. இந்தத் தேர்வில் சுயேச்சைக் குழுவுக்கு ஈ.பி.டி.பி. ஆதரவு வழங்கியது.

இந்தநிலையில், நேற்று புதிய தவிசாளர் 2022ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்தபோது சுயேச்சைக் குழுவுடன் இணைந்து ஈ.பி.டி.யுமாக ஐவர் ஆதரவாக வாக்களித்தனர். இருந்தபோதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியன இணைந்து 6 வாக்குகள் எதிராக வாக்களித்தமையால் வரவு – செலவுத் திட்டம் தோல்வி அடைந்தது. எனினும், குறித்த சபையைக் கைப்பற்றுவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் வேட்பாளர் ஒருவர் களமிறக்கப்படவுள்ளார் என்று கூட்டமைப்பின் நம்பகரமான தகவல்கள் தெரிவிக்கின்றன.

## முன்கூட்டியே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வருட மாணவனான சிதம்பரநாதன் இளங்குன்றன் என்பவர் வாடகைக்கு தங்கியிருந்து கல்வி கற்று வந்த வன்னிய சிங்கம் வீதி, கோண்டாவில் கிழக்கில் உள்ள வீட்டில் மர்மமான முறையில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

இது தொடர்பான வழக்கு விசாரணை யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிவான் பீட்டர் போல் முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது சிரேஷ்ட சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா மரணமடைந்த மாணவன் சார்பில் மன்றில் ஆஜராகியிருந்தார்.

இதன்போது குறித்த மாணவனின் மரணம் தொடர்பில் முன்கூட்டியே தகவல் வெளியானமை தொடர்பில் சந்தேகம் இருக்கின்றது எனவும், ஒரு புலன் விசாரணையை மேற்கொள்ளுமாறும் மன்றில் கோரினார்.

முன்கூட்டியே தகவல் வெளியானமை தொடர்பில் கோப்பாய் பொலிஸாரிடம் தகவல்களை வழங்குமாறு நீதிவான் பணிப்புரை விடுத்திருந்தார்.

மீண்டும் விசாரணை நேற்று எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில் முன்கூட்டியே தகவல் வெளியானமை தொடர்பான தகவல்கள் பதியப்பட்டுள்ளன எனவும், தொலைபேசி இரசாயனப் பகுப்பாய்வு அறிக்கை இன்னும் கிடைக்கப்பெறவில்லை எனவும், அதனைத் துரிதமாகப் பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் பொலிஸார் மன்றில் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து தொலைபேசியின் இரசாயனப் பகுப்பாய்வு அறிக்கையைப் பெறுவதற்கு இரசாயன பகுப்பாய்வுதிணைக்களத்துக்கு அறிவிப்பதாகவும், முன்கூட்டியே தகவல் வெளியானமை தொடர்பான அறிக்கையை மன்றுக்கு சமர்ப்பிக்குமாறும் நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.







JSAC

பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாடு - 2021

16 Days of Activism against Gender Based Violence

(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)

"குடும்பங்களில் அன்புதனைப் பகிர்ந்திடுவோம்...
அகம் தன்னில் அன்பால் மகிழ்ந்திடுவோம்...
அன்பின் வாசனை பரப்பிடுவோம்... அகிலமெங்கும் அகன்றிடும்
வன்முறை இப்போதே...!"

16
2021

யாழ் சமூக செயற்பாட்டு மையம் | Jaffna Social Action Center (JSAC)

# நல்லூர் அரசடி வீதியில் உள்ள பாரதியார் சிலை அகற்றப்பட்டு புதிய சிலை வைப்பதற்கு மாநகர சபையால் ஏற்பாடுகள் பூர்த்தி






(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிசெ.09

நல்லூர் அரசடி வீதியில் உள்ள பாரதியார் சிலை அகற்றப்பட்டு புதிய சிலை வைப்பதற்கு மாநகர சபையால் ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

தற்போதைய புதிய சிலை பாரதியாரின் சொந்த ஊரான எட்டியபுரத்தைச் சேர்ந்த புருசோத்மன் என்பவரால் இலவசமாக வடிவமைத்து வழங்கிய சிலை தற்போது மாநகர சபை நிர்வாகத்தால் ஏற்றிவரப்பட்டு மறைத்து வைக்கப்பட்டுள்ளது.

தற்போதைய சிலையில் சில சேதங்கள் ஏற்பட தொடர்ந்தும் திருத்தம் செய்யப்படுவதால் இந்திய தூதரகத்தின் விருப்பத்தின் பெயரில் புதிய சிலை வடிவமைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்ற போதும் புதிய சிலை செய்வதற்கோ அல்லது அதனை வைப்பதற்கான எந்த அனுமதியோ அல்லது குறைந்த பட்சம் தகவலோ மாநகர சபைக்கு வழங்கப்படவில்லை என்ற நிலையில் இது தொடர்பான மேலதிக விவரம் ஏதும் சபை அறிந்திருக்கவில்லை.

தற்போது வைக்கப்பட்டுள்ள சிலை 1976 ஆம் ஆண்டு அந்த இடத்தில் வைக்கப்பட்டது. இதே நேரம் எதிர்வரும் 11ஆம் திகதி சுப்பிரமணிய பாரதியாரின் பிறந்த தினம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் ரயில் மோதி மரணம்!

## வட்டவளையில் துயரம்

வட்டவளை – ரொசல்ல பகுதியில் ரயில் மோதி 3 பேர் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று (புதன்கிழமை) முற்பகல், ரொசல்ல ரயில் நிலையத்துக்கு அருகில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை, தாய் மற்றும் மகன் ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

இவர்கள் ரயில் வரும் வேளையில், ரயில் கடவையை கடக்க முயற்சித்த போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.


# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

## வெளிவாரிப் பரீட்சைகளுக்கு தோற்றுவதற்கான ஆர்வத்தை வெளிப்படுத்தல்

* கலை முதற் தேர்வு, கலைமாணித் தேர்வு பகுதி - I, பகுதி - II (இறுதிச் சந்தர்ப்பம்)
* வணிக முதற் தேர்வு, இரண்டாம் தேர்வு, மூன்றாம் தேர்வு, நான்காம் தேர்வு (புதிய பாடத்திட்டம்) (இறுதிச் சந்தர்ப்பம்)
* வணிக முதற் தேர்வு, வணிகமாணி - பகுதி - I, பகுதி - II, பகுதி - III (பழைய பாடத்திட்டம்) (இறுதிச் சந்தர்ப்பம்)
* இசைமாணி / நடனமாணி முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம் வருடத்தேர்வு (இறுதிச் சந்தர்ப்பம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் நடாத்தப்படும் மேற்குறிப்பிட்ட வெளிவாரிப்பரீட்சைகளிற்கு (ஆண்டிறுதிப்பரீட்சை) தோற்றுவதற்காக குறித்த பட்டக்கற்கைநெறிகளுக்கு பதிவுசெய்து இதுவரை பூர்த்தி செய்யாத மாணவர்களுக்கு இறுதிச்சந்தர்ப்பமாக இப்பரீட்சைகளினை நடாத்துவதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தீர்மானித்துள்ளது.

மேற்குறிப்பிட்ட தீர்மானத்திற்கு அமைவாக இறுதிச் சந்தர்ப்பமாக இப் பரீட்சைகள் காலாண்டு இடைவெளி அடிப்படையில் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளன அத்துடன் மாணவர்களின் நலன்கருதி மேற்படி பாடநெறிகளுக்கான துரிதமீட்டல் வகுப்புக்களை யாழ். பல்கலைக்கழகத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதற்கு தோற்றவுள்ள மாணவர்களின் எண்ணிக்கை, பாட அலகுகள், மீட்டல் வகுப்புகளிற்கான கட்டணம் மற்றும் பரீட்சைக் கட்டணம் என்பவை தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளும் முகமாக மேற்படி விபரங்களை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலைய இணையத்தளத்தில் இருந்து **(www.cod.jfn.ac.lk)** விண்ணப்பப்படிவங்களை பதிவிறக்கம் **(download)** செய்து திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். பதிவுத் தபால் மூலம் அனுப்ப விரும்புவோர் கீழக்குறிப்பிடப்பட்ட முகவரிக்கு அனுப்பிவைக்கலாம்.

**பிரதிப் பதிவாளர்,**
**திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி **31.12.2021** (வெள்ளிக்கிழமை) ஆகும். மேலும் மேற்குறிப்பிடப்பட்ட இப்பரீட்சைகள் எக்காரணத்திற்காகவும் மீண்டும் நடாத்தப்படமாட்டாது என்பதனையும் இம் மாணவர்களது கற்கைநெறிக்கான பதிவுகள் யாவும் இப்பரீட்சையின் பின்னர் காலாவதியாகும் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

மேலதிக தகவல்களுக்கு 021- 222- 3612 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

**பதிவாளர்**
**08.12.2021**


### பிரியந்த குமார படுகொலை தொடர்பாக:

# பாகிஸ்தானியப் பிரதமர் இம்ரான்கானுக்கு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கடிதம்

பிரியந்த குமார தியவதன படுகொலை தொடர்பில் பக்கச்சார்பற்ற முழுமையான விசாரணை நடத்துவதை உறுதிப்படுத்துமாறு பாகிஸ்தான் அரசாங்கத்தையும் அதன் சட்ட அமுலாக்க முகவர் அமைப்புகளையும் கேட்டுக்கொள்ளுமாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், பிரதமர் இம்ரான் கானுக்கு கடிதம் எழுதியுள்ளது.

இந்தக் கொடூரமான குற்றத்துக்குக் காரணமான அனைவருக்கு எதிராகவும் பாதிக்கப்பட்ட தரப்பினரின் உரிமைகளைப் பாதுகாக்கவும் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துமாறும் பாகிஸ்தான் பிரதமரை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இலங்கையில் 21 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சட்டத்தரணிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் உயர்மட்ட அமைப்பான இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், விசாரணையின் முன்னேற்றத்தை அதன் முடிவு வரை உன்னிப்பாகக் கண்காணிக்கும் என்று கூறியுள்ளது.

இதற்கிடையில், பாகிஸ்தானின் சியால்கோட்டில், இலங்கை பிரஜை கொல்லப்பட்டமையை உடனடியாகவும் கடுமையாகவும் கண்டித்தமைக்காக பாகிஸ்தான் பிரதமரை இலங்கை சட்டத்தர ணிகள் சங்கம் பாராட்டியுள்ளது.

# தேர்தல்கள் ஆணைக்குழுவின் கலந்துரையாடல் கிளிநொச்சியில்

தேர்தல்கள் ஆணைக்குழுவின் 2022ஆம் ஆண்டு தொடக்கம் 2025 ஆம் ஆண்டு வரையான மூலோபாய திட்டம் தொடர்பிலான கருத்துக்களை கோரும் கலந்துரையாடல் ஒன்று கிளிநொச்சியில் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடல் நேற்று (புதன்கிழமை) காலை 10 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட செயலக பயிற்சி நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது.

கிளிநொச்சி தேர்தல்கள் செயலகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்கள், தேர்தல்கள் திணைக்கள உத்தியோகத்தர்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது, தேர்தல்கள் திட்டங்கள் தொடர்பான பரிந்துரைகள் கலந்து கொண்டோரால் முன்வைக்கப்பட்டன.

மாற்றுத்திறனாளிகளுக்கான விசேட ஏற்பாடுகளை மேற்கொண்டு தருதல், முதியவர்களுக்கான வாக்களிப்பு நிலையங்களுக்கான போக்குவரத்து வசதிகள் உள்ளிட்ட விடயங்கள் இதன்போது முன்வைக்கப்பட்டன.

இதேவேளை, கடமைகளின் நிமித்தம் ஊடக நிறுவனங்களில் பணிபுரிவோருக்கு வாக்களிப்பதற்கான சந்தர்ப்பங்கள் கிடைப்பதில்லை. அதே போன்று, தூர இடங்களுக்கு பணிகள் மற்றும் தொழில்கள் நிமித்தம் சென்றிருப்போர், கூலி தொழிலுக்காக தூர இடங்களுக்கு சென்றிருப்போரும் வாக்களிப்பதற்கான சந்தர்ப்பம் மிகக் குறைவு என்பதால், அவர்களுக்கான விசேட ஏற்பாடுகளை செய்து கொடுத்தல் தொடர்பில் ஊடகவியலாளர்களால் கருத்து முன்வைக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பிலும், ஏனைய விடயங்கள் தொடர்பிலும் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதாக இதன்போது தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தேசிய பாதுகாப்பு, சட்டம், ஒழுங்கு தொடர்பாக பாதுகாப்பு ஆலோசனைச் சபையில் அவதானம்

நாட்டின் தேசிய பாதுகாப்பு, சட்டம் மற்றும் ஒழுங்கு, தற்போதைய பாதுகாப்புப் பிரிவினரின் அவதானத்துக்கு இலக்காகியுள்ள விடயங்கள் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனைச் சபையில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்கிழமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில், நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியின் முதலாம் இலக்க அறையில் ஆலோசனை சபை கூடியது.

பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனைச் சபைத் தலைவர் என்ற ரீதியில், இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக நாடாளுமன்றத்துக்கு வருகை தந்த ஜனாதிபதியை, சபை முதல்வரும் அமைச்சருமான தினேஸ் குணவர்தன மற்றும் ஆளுங்கட்சியின் பிரதம கொறடாவும் அமைச்சருமான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஆகியோர் தலைமையிலான அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரவேற்றனர்.

நாட்டின் தேசிய பாதுகாப்பு, சட்டம் மற்றும் ஒழுங்கு, தற்போதைய பாதுகாப்புப் பிரிவினரின் அவதானத்துக்கு இலக்காகியுள்ள விடயங்கள் தொடர்பில், அமைச்சர் சமல் ராஜபக்ஷ உள்ளிட்ட அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்வைத்த பிரச்சினைகள் மற்றும் யோசனைகள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்க, பாதுகாப்புச் செயலாளர் கமல் குணரத்ன, முப்படைகளின் தளபதிகள் மற்றும் பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட பாதுகாப்பு அமைச்சின் கீழ் காணப்படும் நிறுவனங்களின் அதிகாரிகள், இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இராஜதந்திரக் குழப்பம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை புதுடில்லி வரும்படி இந்தியத் தரப்பு திடீரென அழைப்பு விடுத்தது. பின்னர் கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தனின் கோரிக்கையின் பேரில் அது ஒத்திவைககப்பட்டிருக்கிறது. புதிய திகதி எப்போது என்பது தெரியவில்லை. உடனடியாக மீள அழைப்பு வருமா என்பதும் உறுதியில்லை.

திடுதிப்பென அழைப்பு வந்தமையால், என்ன செய்வது, என்ன நிலை எடுப்பது என்பதைத் தீர்மானிக்க முடியாத நிலையில் – ஒரிரு வார கால அவகாசம் பெறுவதற்காக – சம்பந்தன் இந்தப் பயணத்தைத் தள்ளிப் போட முயன்றிருக்கலாம் என்ற எண்ணம் புதுடில்லி வட்டாரங்களில் ஓடுகின்றது.

உள்கட்சி அழுத்தங்கள் காரணமாக இந்தப் பயணத்தை உடனேயே முன்னெடுக்க முடியவில்லை என்று சம்பந்தன் தனக்கு நெருக்கமான வட்டாரங்களுக்குக் கூறியிருக்கின்றார். ஆனால், இந்தியத் தரப்பு அதனை ஒரு காரணமாகக் கவனத்தில் எடுக்கவில்லை என்றே தெரிகின்றது. அரசியலில் கிழட்டு நரியான சம்பந்தனை இந்தியா குறைத்து மதிப்பிட மாட்டாது என்பதும் நிச்சயம்.

புதுடில்லி ஆட்சித் தலைமையின் சிந்தனைப் போக்குத் தொடர்பில் அங்குள்ள விடயமறிந்த செய்தி வட்டாரங்கள் வேறு விதமாகத் தகவல் வெளியிட்டன.

எது, எப்படி என்றாலும், இன்றைய நிலையில் இந்தியத் தரப்பு 13ஆவது திருத்தத்தையும், அதன் முழு அளவிலான நடைமுறையாக்கத்தையுமே வலியுறுத்தும். அது மாத்திரமன்றி, 13ஆவது திருத்தத்தை முதற்கட்டமாகவேனும் முழு அளவில் நடைமுறைப்படுத்துங் கள் என்ற கோரிக்கையைப் பகிரங்க வெளியில் வற்புறுத் துமாறு கூட்டமைப்பை வழிப்படுத்த முயலும் அல்லது அறி விக்குமாறு கூட்டமைப்புக்கு புதுடில்லி அழுத்தம் தரும் என சம்பந்தன் கருதுகின்றார்.

பதின்மூன்றுக்கு அப்பால் சென்று அதிகாரப் பரவலாக்கம் செய்வது குறித்து சம்பந்தன் இப்போது பேசுகின்றார். அவர் தரப்பின் எதிர்பார்ப்பும் அத்தகையதாக இருக்கின்றது.

தமது பிரதிநிதிகளாக சுமந்திரனையும் ஏனையோரையும் அமெரிக்கா வரை அனுப்பி அந்த நிலைப்பாட்டை அவர் காத்திரமாக வலியுறுத்த வைத்திருக்கின்றார்.

அந்த வற்புறுத்தலின் அடிப்படையில், இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக வரக் கூடிய யோசனைத் திட்ட விடயத்தில் தனது கருத்து நிலைப்பாடு அடங்கிய அறிவிப்பை அமெரிக்க அடுத்த மாதமளவில் வெளியிடும் என சுமந்திரனைப் போல சம்பந்தனும் நம்புகின்றார்.

இந்தச் சூழ்நிலையில், புதுடில்லியின் எதிர்பார்ப்புக்கு அமைய, 13ஆவது திருத்தத்தைக் கட்டிப் பிடிக்கும் நிலைப்பாடு ஒன்றைத் தாமே இப்போது பகிரங்கப்படுத்துவார் எனின், அமெரிக்கா கூட அந்தக் கட்டத்துக்கு இறங்கி விடும் என சம்பந்தன் எண்ணுகின்றார்.

எனவே, அமெரிக்கா தனது நிலைப்பாட்டை பகிரங்கப்படுத்த முன்னர் புதுடில்லி விஜயத்தை மேற்கொள்வதோ, புதுடில்லி அங்கு வழங்கக் கூடிய வழிகாட்டலை ஒட்டி, அதனைப் பிரதிபலிக்கும் பகிரங்கக் கருத்து வெளிப்பாட்டை முன்வைப்பதோ உசிதமானது அல்ல என சம்பந்தன் கருதுகின்றார் என்று புதுடில்லி வட்டாரங்கள் கணக்கெடுகின்றன.

இலங்கை விடயத்தில் அமெரிக்கா அதீத தலையீடு காட்டி, அதிகப் பிரசங்கித்தனமாக அகலக் கால் வைக்கும் அறிக்கைகளை வெளியிட முன்னர், கூட்டமைப்பை புதுடில்லிக்கு அழைத்து, 13ஆவது திருத்தத்துடன் விடயத்தை வெட்டி வைப்பது நல்லதும், சாத்தியமானதும் என்று பாரதத் தரப்புக் கருதுகின்றது. அதனால்தான் அமெரிக்கப் போக்கில் கட்டவிழும் விடயங்களைக் கணக்கில் எடுத்து, கூட்டமைப்பை திடுதிப்பென புதுடில்லிக்குக் கூப்பிடும் அழைப்பு அங்கிருந்து வந்தது.

அதற்கு இணங்காத சம்பந்தனின் தீர்மானம், பங்காளிக் கட்சி தலைவர்கள் ஒரிருவருக்குக் கசந்து போனமைக்கும், புதுடில்லியின் இந்தப் போக்குடன் இணைந்து நிற்கும் அவர்களின் நிலைப்பாடுதான் காரணம் என்றும் கூறப்படுகின்றது.

தமிழர் பிரச்சினையைக் கையாள்வதில் தரப்புகளிடையே இராஜதந்திரக் குழப்பம் உச்சமாக இருப்பது தெளிவு.

# தேசிய பிறப்புச் சான்றிதழ்களுடன் அடையாள இலக்கம் விநியோகம்

### ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவிப்பு



நாட்டில் அடையாள இலக்கத்துடன் தேசிய பிறப்புச் சான்றிதழ் விநியோகிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

பிறப்பு முதல் இறப்பு வரையிலான சேவைகளை பெறும் போது அனைத்து மக்களும் சட்ட பூர்வ சேவைகளை இலகுவாகக் முடியும் என செவ்வாய்க்கிழமை நடைபெற்ற வாராந்த அமைச்சரவை மாநாட்டில் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் இந்தத் தீர்மானம் சமர்ப்பிக்கப்பட்டது.

அத்துடன் பிறப்புச் சான்றிதழ் என்பதற்குப் பதிலாக தேசிய பிறப்பு சான்றிதழ் என்றே கூறப்படும் எனவும் இந்தச் சான்றிதழ் இரு மொழிகளிலும் தயாரிக்கப்படும் என்றும் மேலும் தேசிய பிறப்புச் சான்றிதழ் பிறப்பின் போது அடையாள இலக்கம் உள்ளெடுக்கப்படும் எனவும் அதில் கூறப்பட்டுள்ளது.

மேலும் மிக பாதுகாப்பான முறையில் அச்சிடப்படவுள்ள தேசிய பிறப்பு சான்றிதழில் இரகசிய குறியீட்டு அடையாளம், அதற்கான இலக்கம் மற்றும் water mark உள்ளிட்ட விடயங்கள் உள்ளடக்கப்படவுள்ள எதையும் பதிவாளர் நாயகம் திணைக்கள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து சித்திரர்களை பாதிக்கும் விடயமாக பிறப்புச் சான்றிதழில் குறிப்பிடப்படும் பெற்றோரின் திருமண நிலை தொடர்பான விடயம் பிறப்புச் சான்றிதழில் இருந்து அகற்றப்பட்டுள்ளது, எனினும் பெற்றோரின் குடியுரிமை தொடர்பில் தேசிய பிறப்பு சான்றிதழில் குறிப்பிடப்படும் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த புதிய தேசிய பிறப்புச் சான்றிதலுக்கான பணிகள் நிறைவு பெற்றவுடன் அதனை மக்கள் மயமாக்க எதிர்பார்ப்பதாகவும் பதிவாளர் நாயகம் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1968 ஆம் ஆண்டு 32 ஆம் இலக்க ஆள்களைப் பதிவு செய்யும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய தேசிய ஆள்கள் பெயர் பட்டியலை பேணுதல், 15 வயதை அடைந்தவர்கள் மற்றும் அடைய உள்ள இலங்கைப் பிரஜைகளின் விண்ணப்பத்துக்கு அமைய அவர்களை பதிவு செய்து தேசிய அடையாள அட்டை வழங்குதல் போன்ற செயற்பாடு ஆள்பதிவு திணைக்களத்துக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# கொழும்பில் விரைவில் மின்சார பஸ் அறிமுகம்

### அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிப்பு



கொழும்பு வீதிகளில் மின்சாரத்தால் இயக்கப்படும் பஸ் விரைவில் அறிமுகப்படுத்தப்படும் என சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். ஏற்கனவே இது தொடர்பாக தெரிவிக்கப்பட்ட நிலையில், முதலில் குறுந்தூர போக்குவரத்து சேவைகள் ஆரம்பிக்கப்படும். மேலும் வாகன இறக்குமதி மீதான தடை நீக்கப்படும் போதெல்லாம் மின்சார வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு முன்னுரிமை கொடுக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

சுற்றுச் சூழலுக்கு உகந்த மின் சக்தியின் அவசியத்தை வலியுறுத்தி இலங்கையின் முக்கிய ஆறுகள் மற்றும் நீர் ஓட்டத்தில் மிதக்கும் சூரிய சக்தி அமைப்புக்கள் அறிமுகப்படுத்தப்படும் எனவும் நிலக்கரி மற்றும் அனல் மின்சார பயன்பாடு விரைவில் நிறுத்தப்படும் என அவர் கூறினார்.

இதனையடுத்து வரவு – செலவுத் திட்டம் மீதான குழுவிவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி கூறுகையில் –

2022 ஆம் ஆண்டளவில் பயணிகளுக்கு திறமையான மற்றும் வசதியான பொதுப் போக்குவரத்து சேவையை டிஜிற்றல் மயமாக்க நடவடிக்கை எடுக்கப்படும். இது தொடர்பாக முதற்கட்டமாக அமைச்சின் கீழ் 'சஹ சர' திட்டத்தின் மூலம் டிஜிற்றல் மயமாக்கல் திட்டம் செயற்படுத்தப்படும் எனவும் 2, 000 தனியார் பஸ்களுக்கு ஜி.பி.எஸ். தொழில்நுட்பம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

அத்துடன் டிஜிற்றல் மயமாக்கல் திட்டத்தின் கீழ் மக்கள் வசதியைப் பெறுவதற்கு தொலைபேசி செயலி ஒன்று இலவசமாக வழங்கப்படும். இந்தச் செயலியின் மூலம் மக்கள் தங்கள் அன்றாட பயணங்களுக்கு அழைத்துச் செல்லும் பஸ் வரும் நேரம் மற்றும் அதில் பயணிக்கும் பயணிகளின் எண்ணிக்கை உள்ளிட்ட விரிவான தகவல்களை பெற முடியும். – என்றார்.

# பண்டிகைக் காலங்களில் அவதானமாக செயற்படுக!

### வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் அறிவுரை

பண்டிகைக் காலங்களில் மிகவும் அவதானத் துடன் செயற்படுமாறு மக்களை கேட்டுக் கொள்கிறேன் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

நாடு திறக்கப்பட்டுள்ள நிலையில் வெவ்வேறு சமூக மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதற்கமைய தொற்றாளர் எண்ணிக்கையில் மேலும் அதிகரிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. தற்போது பாரியளவில் தொற்றாளர் எண்ணிக்கை அதிகரிக்காவிட்டாலும், நாளாந்தம் இனங்காணப்படும் தொற்றாளர் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்படாமை அவதானம் செலுத்தப்பட வேண்டிய விடயமாகும் என்றும் அவர் கூறினார்.

காலைக்கதிர் Kalaikkathir

# 13க்கு செயல்வடிவம் கொடுக்க கோருகின்றார் துரைரெத்தினம்

சர்வதேச அங்கீகாரத்தை பெற்றுக் கொண்ட சர்வதேசத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த தமிழ்த் தலைமைகள் செயல்வடிவம் கொடுக்க வேண்டும் என கிழக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினரும் ஈ.பி.ஆர்.எல்.எவ், பத்மநாபா மன்றத் தலைவருமான இரா.துரைரெத்தினம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.




முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினரும் ஈ.பி.ஆர்.எல்.எவ், பத்மநாபா மன்ற தலைவருமான இரா.துரைரெத்தினம ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

1990 ஆம் ஆண்டில் இருந்து இன்று வரையும் மாகாணமுறை நிர்வாகம் அமுலில் உள்ளது. இது நாடாளுமன்றத்தில் சட்டத்திருத்தத்தில் உள்ளடக்கப்பட்ட ஓர் அரசியல் அதிகாரமாகும். இது இலங்கையில் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

13 ஐப் பொறுத்தவரையில் சிறுபான்மை இனத்துக்காக வடக்கு, கிழக்கை இணைத்து ஒரு மாகாண சபையாக இயங்கி வந்த நிலையில் பல அதிகாரங்கள் மாகாணசபை நிர்வாகத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டன. இது காலப்போக்கில் இனவாத அரசால் சில அதிகாரங்கள் இல்லாமலாக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக, இணைக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணசபை 30.06.2006 ஆம் ஆண்டு காலகட்டத்தில் இணைந்த முறைமை தவறென பெரும்பான்மை இனத்தைச் சார்ந்த ஒருவரால் வடக்கு, கிழக்கு மாகாணசபை நிர்வாகம் கிழக்கு வேறாக, வடக்கு வேறாக பிரிக்கப்பட்டது.

இத்தோடு, மாகாண நிருவாகத்திற்கென உள்ளடக்கப்பட்ட அதிகாரங்களான பிரதேச செயலகத்துக்கு கட்டுப்பட்ட சில அதிகாரங்கள் இல்லாமலாக்கப்பட்டதோடு, பொலிஸ் அதிகாரங்கள், காணி அதிகாரங்கள், நிதி தொடர்பான அதிகாரங்கள், விவசாய, நீர்ப்பாசனத்தோடு சம்பந்தப்பட்ட அதிகாரங்கள், பொதுச்சேவை, பொது நிர்வாகத்தின் கீழுள்ள அதிகாரங்களை மத்திய அரசு கையில் எடுத்துக் கொண்டது.

குறிப்பிட்ட அதிகாரங்களை எடுத்துக் கொண்டாலும், இன்னும் சில விடயங்களில் மாகாணசபை முறைமையின் கீழுள்ள நிலையில் முன்பு இல்லாமல் இருக்கும் தமிழர்கள் ஆகிய நாங்கள் உள்ளதை சிறப்பாகச் செய்வதற்கு முயற்சிப்பதோடு, அரசு சிறுபான்மை இனத்துக்கு எதிரான அதிகாரத்தை இல்லாமலாக்குகின்ற புதிய அதிகாரத்தை தர மறுக்கின்ற செயல்வடிவத்தை செய்வதற்கும், சர்வதேச அங்கீகாரத்தை பெற்றுக் கொண்ட சர்வதேசத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த தமிழ்த் தலைமைகள் செயல்வடிவம் கொடுக்க வேண்டும். கடந்த காலத்தில் மாகாணசபை தொடர்பாக விட்ட தவறுகளை சுயவிமர்சனம் செய்து கொண்டு எதிர்காலத்தில் நாடாளுமன்றத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுலாக்க ஒத்துழைக்க வேண்டுமென அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



## ஐக்கிய இராச்சியத்தின் உயர்ஸ்தானிகருக்கும் ஹாபிஸ் நசீர் எம்.பிக்கும் இடையில் சந்திப்பு

ஐக்கிய இராச்சியத்தின் இலங்கை தூதுவர் ஸாராஹ் ஹல்டன், கடந்த செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு மாவட்டத்துக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். இதன்போது மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான ஹாபிஸ்நசீர்அஹமட்டைசந்தித்து,இலங்கையின் சமகால நிலைமைகள் தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடியுள்ளார்.

இலங்கை உட்பட உலகலாவிய ரீதியில் ஏற்பட்ட கொரோனா பாதிப்பால் பொருளாதாரம் மற்றும் ஏனைய துறைகளில் ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பில் கலந்துரையாடியதோடு, மட்டக்களப்பு மாவட்டத்தில் இதனால் மக்கள் எதிர்நோக்கும் சமூக, பொருளாதார தாக்கங்களையும் நாடாளுமன்ற உறுப்பினர், பிரித்தானிய தூதுவரிடம் தெளிவுபடுத்தினார். அதனைத் தொடர்ந்து மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம்கள் நீண்ட காலமாக எதிர்நோக்கி வருகின்ற காணி அபகரிப்பு, பிரதேச செயலக எல்லை நிர்ணய மாற்றங்கள் தொடர்பிலும் சுட்டிக்காட்டியதோடு, அது தொடர்பிலான ஆவணங்களும் பிரித்தானிய தூதுவரிடம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மட்டு. ஈரளக்குளம் விவசாயிகள் வீதியை மறித்து சட்டவிரோத மண் அகழ்வுக்கெதிராக போராட்டம்

சட்டவிரோத மண் அகழ்வு காரணமாக தங்களது வீதிகள் முற்றாக சேதமடைந்துள்ளன எனவும் மட்டக்களப்பு மண் வளம் சூறையாடப்படுகின்றதை கண்டித்தும் செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட ஈரளக்குள விவசாயிகள் வீதியை மறித்து போராட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.



மேற்படி போராட்டத்தில் அபிவிருத்திக் குழுத் தலைவர் சிவநேசதுரை சந்திரகாந்தன் மற்றும் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் ஆகியோர் உடனடியாக இதை தடுத்து நிறுத்தக் கோரியும் மண்ணைச் சுரண்டுவதா கிழக்கை மீட்கும் பணி என அவர்கள் கோஷமிட்டனர்.

போராட்டக்காரர்கள் வெளி மாவட்டங்களில் இருந்து வந்த கனரக வாகனங்களை திருப்பி அனுப்பியதுடன் மண்களை ஏற்றிச்சென்ற கனரக வாகனங்களை மறித்து அனைத்து மண்ணையும் ஏற்றிய இடத்தில் பறிக்கச் செய்துள்ளனர்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த மண்ணுரிம உரிமையாளர் வீதி சேதமடைந்தது வேதனைக்குரிய விடயம் எனவும் குறித்த வீதியைத் தனது செலவில் செப்பனிட்டுக் தருகிறேன் எனவும்இன்றையநாளில்இருந்து மண்ணை வெளி மாவட்டத்துக்கு அனுப்புவதற்கு அனுமதி அளிக்கப்படாது என உறுதியளித்தமையை அடுத்து போராட்டக்காரர்கள்கலைந்துசென்றுள்ளனர்.

மண்களை ஏற்றிய கனரக வாகனங்கள் அனைத்து மண்ணைபறித்துவிட்டுவெறும் கனரக வாகனங்களாக வெளி மாவட்டங்களுக்கு சென்றமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனையில் கடல் கொந்தளிப்பு ஆலயங்கள், வீடுகள் வெள்ளத்தில்!

கல்முனை மற்றும் பாண்டிருப்பு பகுதிகளில் கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை திடீரென ஏற்பட்ட கடற்கொந்தளிப்பால், கடற்கரை வீதியையும் தாண்டி குடியிருப்புப் பகுதிக்குள்ளும் கடல் நீர் புகுந்து, வெள்ளமாக மாறியது.

கல்முனை மாமாங்க விநாயகர் ஆலயம் மற்றும் பாண்டிருப்பு விஷ்ணு ஆலயபகுதிகளும்பலவீடுவளவுகளும் வெள்ளத்தில் மூழ்கின.

இவ்வாறு கடல் நீர் புகுந்தமையால், பிரதேச மக்கள் அச்சமும் கலவரமும் அடைந்த நிலையில் அசௌகரியங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

கல்முனை மாநகர சபை உறுப்பினரான ஹென்றி மகேந்திரன், மாநகர மேயர் மற்றும் ஆணையாளர் ஆகியோருடன் தொடர்புகொண்டு நிலைமையை விளக்கியதையடுத்து, மாநகரசபையின்கனரகஇயந்திரங்கள் மூலம் அப்பகுதிகளில் தேங்கியுள்ள கடல் நீரை அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

கல்முனை மற்றும் பாண்டிருப்பு பிரதேசங்களில் அண்மைக் காலமாக கடலரிப்பு ஏற்பட்டு வருகின்றது. இதனைக் கட்டுப்படுத்துவதற்கு கரையோரம் பேணல் திணைக்களம், அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் சுற்றாடல் அதிகார சபை உள்ளிட்ட அரசநிறுவனங்கள்அவசரநடவடிக்கை எடுக்க முன்வர வேண்டுமெனக் கோரி, கல்முனை மாநகர சபையில் பிரேரணையொன்று நிறைவேற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் - 215**

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

### 556. ஏன் கேலிக்கூத்தாகிறது?

சம்பந்தன் வயது முதிர்வில் சுகவீனமாக இருக்கிறார். அவர் அமெரிக்கா, கனடா, பிரித்தானியா கூட போகவில்லை. தூதுக்குழுவொன்றே சென்றது.

அவர் இந்திய பிரதிநிதியுடன் கொழும்பில் தொடர்பிலிருக்கிறார். சம்பந்தப்பட்ட விவரங்கள் அவருக்கு அத்துப்படி. ஆகவே நேரடியாக அவர் கட்டாயம் பங்குபற்ற வேண்டிய தேவையில்லை. zoom முறையில் இந்தியத் தூதரகத்திலிருந்தே பங்கு பற்றியிருக்கலாம். மாவை சேனாதிராசாவின் கல்யாணம் வருவதாலும், அதன் ஏற்பாடுகளால் அவர் பங்குபற்ற முடியாதிருப்பதால் இந்த சந்திப்பை பின்போட கேட்கப்பட்டதாகவும், அதனை தமது ஆளுமையில் சம்பந்தன் குறிப்பிட்டவர்களுடன் பேசி இன்னுமொரு திகதி கேட்கப்பட்டதாகவே செய்திகள் வந்தன. அது ஏற்றுக் கொள்ளப்பட்டதாகவும் அதே செய்திகள் தெரிவித்தன.

தமிழ் ஊடகங்களோ "போன மச்சான் வெறும் கையோட திரும்பி வந்தார்" என பஸிலது பயணத்தை பற்றி அபிப்பிராயங்களும் கொடுத்தன. அது தொடர்பாக அதன் கையோடு வருடங்களாக இழுபறியில் இருந்த இந்தச் சந்திப்புக்கு அழைப்பு வந்தது.

கல்யாணத்தை சாட்டு சொல்லி அந்த அழைப்பை பின் போடலாம். அது சாதாரணமானதாகவும் அவர்களுக்கு படலாம். ராஜதந்திரியான பஸில், இந்தியாவிற்கானபிரதிநிதியாக இயங்கும் மிலிந்த மொறகொடவின் சாணக்கிய அறிவுரைகளில்லாமல் அந்தப் பயணத்தை மேற்கொண்டிருக்கமாட்டார்.

அவர் சென்றபோது நிதி மந்திரி நிர்மலா சீதாராமனும், வெளியுறவு மந்திரி ஜெய்சங்கரும் சந்தித்து மோடியுடனான சந்திப்பை ஏற்படுத்தாமல் ஆக



வேண்டிய சிலவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும் என தெரிவித்து திருப்பி அனுப்பியதால் "மச்சான் வெறும் கையோட திரும்பி வந்தார்" என தமிழ் ஊடகங்கள் ஒரு வெற்றிக்களிப்பைப் பாடுகின்றன.

சர்வதேச நடப்புக்கள் அப்படித்தான். தமிழ் ஊடகங்கள் மட்டுமல்ல, எல்லா அரசியல் ஆய்வு ஊடகங்களும் அவற்றை உற்று நோக்கும் அதேபோல்தான். கல்யாணச் சாப்பாட்டைச் சொல்லி பிரயாணத்தை மாற்றியதும், சர்வதேச ஊடாட்டங்களில் அவற்றின் மகா நாடுகளில் ஒரு நாட்டின் ஜனாதிபதியோ, அதன் பிரதிநிதியோ நடைபெறும் பிரச்சினைகள் காரணமாக கைகுலுக்காமல் விடுவதோ, இடங்கள் மாறி உட்கார அழைப்பாளர்களுக்கு தெரிவிப்பதோ, இடைவேளைகளில்



விருந்துகளின் போது விலத்தி போவதோ கூட நோக்கங்களுக்காக பலவாறாக ஆராயப்படும். இவை கட்சி நலன் சார்ந்து மாவைக்காக பொறுப்பதாக இருக்கலாம். ஆனால் தமிழ் மக்கள் நலனிற்கு முக்கியம் தந்ததாகத் தெரியவில்லை.

இந்தக் காரணங்கள் ஊடக வலம் வர, மாவையின் குடும்பத்தினரோ கல்யாணம் அல்ல சந்திப்புக்காக திகதி பின்போடப்பட்ட காரணம், அது சம்பந்தனின் சுகவீனம்தான் என அறிவிக்கிறார்கள். இதில் எது உண்மை? ஏன் இந்த குளறுபடிகள்? சர்வதேசத்தில் இப்படியானவை என்ன நம்பகத்தன்மையை கொடுக்கும்? என்னவென்ன வியாக்கியானங்களுக்கு இடம் கொடுக்கும்?

தமிழ் மக்களது எதிர்காலம் சம்பந்தன் சுகவீனமுற்றால் உறைந்து போக வேண்டுமா? இந்திய அழைப்பு கூட்டமைப்பு மூலமாகவானாலும் அவர்கள் மட்டும்தான் அழைக்கப்பட்டுள்ளார்கள். தாம் குறித்தவர்களை மாத்திரமே பேசுவதற்காகக் கூட்டி வரவேண்டும் என பெயரிடப்பட்டதாக அல்லது கட்டளை தொனியுள்ளதாக நான் கருதவில்லை. அவர்களது அழைப்பு தமிழ் மக்களுக்கானதால் சம்பந்தனது இடத்திற்கு ஆளுமையான ஒருவரை மற்ற தரப்புகளிலிருந்தும் அழைத்து சென்றிருக்கலாம்.




இந்தத் தொடர்ந்த தனிமனித சுயநல கட்சியரசியல்தான் தமிழ் மக்களைப் பாதிக்கின்றது.

### 557. கோடீஸ்வரன் வழக்கில் என்ன அரசியல் இருந்தது? நல்லாட்சி காலத்தில் எதைத் தவறவிட்டார்கள்?

கோடீஸ்வரன் வழக்கில் மேற்கொண்டு செல்லப்படக்கூடியதாக இருந்த சில படிக்கட்டுக்களை கட்டாமலே விட்டார்கள். இவை சுயநல தேர்தல் அரசியலுக்காக கொள்கை சார்ந்தே அதாவது Principled politics ஐக் கடைப்பிடிக்கவில்லை. கோடீஸ்வரன் வழக்கு தொடரப்பட்டதே "சட்டமாக்கப்பட்ட சிங்களம் மட்டும்" அப்போதைய அரசமைப்புச் சட்டத்தின் சரத்து 29 இற்கு முரணானது என்பதற்கே. உச்ச நீதிமன்றத்தின்(Prevy Council) தீர்ப்பு கோடீஸ்வரனுக்கு சாதகமாக அமைந்தது. அவரது சம்பளபாக்கி நிறுத்தப்பட்டது பிழை என அவர் அரசுக்கு எதிராக வழக்கு போடலாம் எனத் தீர்த்து, அதிலுள்ள மற்றப் பிரச்சினைகள் (Issues)இலங்கை நீதிமன்றத்தினால் ஆராயப்படவேண்டும் என பணித்தது.தீர்ப்பு வந்த காலம் தேர்தலும் வந்தது. தமிழ்த் தலைவர்கள் இந்த வெற்றியைப் பாவித்து சம்பள பாக்கியை தமிழ் ஊழியர்களுக்கு பெற்று கொடுத்து, அவர்களை தங்களது வாக்குச் சாவடிக்கு



கொண்டு சென்றதே சந்தர்ப்ப அல்லது நடைமுறை அரசியலாக நடந்தது. சிங்களம் மட்டும் சட்டம் சரத்து 29க்கு முரணானதா என்பதை நீதிமன்றில் மேற்கொண்டு செல்லவில்லை. சம்பள பாக்கியை நிறுத்தும் சுற்று நிருபத்தை மீளப் பெறுகிறோம் என்பதை அரசு அறிவிக்க, சிங்களம் மட்டும் சட்டத்துக்கான எதிர்ப்பை பிசுபிசுக்க விட்டுவிட்டு, பின்னர் சீறீ எதிர்ப்பை எடுத்தனர். ஆனால் சிங்கள தலைவர்களோ சாணக்கியமாக 29 ஆம் சரத்து வாதிக்கப்பட்டு, அது மீண்டும் உச்ச நீதிமன்றுக்கு போய் காலம் இழப்பதை தடுத்து, ஒரேயடியாக அத்திவாரங்களையே அழித்து புதிய குடியரசுக்கான அரசமைப்பை 1972 இல் நிறைவேற்றி அதனூடாக சிங்களம் மட்டும் சட்டத்தை மட்டுமல்ல, பௌத்தத்திற்கும் முன்னுரிமை கொடுத்தார்கள். அவை மூலமாக வேரூன்றிய இந்த சட்ட விதிக்கூறுகள் சிறுபான்மை இனத்தவருக்காக இருந்த வெளிப்படையான சட்ட சரத்துக்கள் எல்லாவற்றையுமே வெட்டி எறிந்து புதைத்



தன. அந்த அரசியலை கோடீஸ்வரனது வழக்கில் விட்டு, அதை மேலெடுத்து 29 ஆம் சரத்தையும் சோல்பரி அரசமைப்பையும் தக்கவைக்காமல், 1970ஆண்டு தேர்தலை குறிவைத்து நாடாளுமன்ற ஆசனங்களுக்காக அரசியல் கட்சிகளுடன் பேரம் பேசியதுதான் அன்றைய தமிழ் மக்கள் செய்த அரசியல். ஆனால் சிங்கள, பௌத்த பெரும்பான்மைக்கு அவர்களது ஒரு நாடு, ஒரு மொழி, ஒரு மதம் என்ற பெரும்பான்மை அரசியலை ஒப்பேற்றினர்.

போரின் பின்பு தமிழ் மக்களின் தலைமை கூட்டமைப்பில் விழுந்தது. தமிழரசுக் கட்சி பெரும்பான்மையாகவும், அதன் கூட்டில் இருந்தவை ஒத்து ஓடுபவையாகவும் இருந்து பிணக்குகளும் வந்தன. ஆனால் தமிழ் மக்களிடமும் சர்வதேசப்பரப்பிலும் கூட்டமைப்பில் எதிர்பார்ப்பிருந்தது. விடுதலைப் போரில் ஈடுபட்ட தலைவர்கள் கூட்டமைப்பில் இருந்தாலும் சர்வதேசத்துடன் ஈடுபடக்கூடிய ஆளுமைத் தலைவர்கள் இல்லாமை உணரப்பட்டு சுமந்திரன் 2010 இல் தேசிய பட்டியலிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினராக உள்வாங்கப்பட்டார். அதுபோலவே நீதியரசரும் முதலமைச்சராக கொண்டுவரப்பட்டார். இரண்டு வருடங்களுக்குள் இணைக் காரியதரிசியாகவும் பின்னர் பேச்சாளராகவும் சம்பந்தனின் பக்க பலத்தோடு சுமந்திரன் உயர்ந்தார். சர்வதேச மூலோபாயங்களோடு அமைந்த 2016 பொதுத் தேர்தலை தொடர்ந்து அமைக்கப்பட்ட "நல்லாட்சி" அரசாங்கத்திலிருந்து யார் வெளியேறினாலும் தாங்கள் கடைசி வரையிருந்து காப்பாற்றும் நிலைப்பாட்டில் நின்றனர். ரணிலோடு சம்பந்தர் சேர்ந்து "சிங்கக் கொடி" பிடித்தார். அரசியல் மேடைகளிலே 2016முன் புதிய அரசமைப்பை ஏற்படுத்தி இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு பெறப்படும் என உறுதியளித்தார். சர்வதேசத்திற்கு வாக்களித்தப்படி பயங்கரவாதச் சட்டம் ஒழிக்கப்படும், மனித உரிமை மன்றங்களோடு சேர்ந்து யுத்தக் குற்றம், காணாமலாக்கப்பட்டோர் விவகாரங்கள் யாவும் நிறைவுக்கு கொண்டு வரப்படும் எனத் தெரிவித்தார். இவற்றுக்காக நல்லாட்சி அரசியல் முக்கியமாக ரணிலில் முழு நம்பிக்கை வைத்து அவரது பதவிக்கு தமிழ் மக்களின் பலவற்றை பறி கொடுத்தனர்.

(வளரும் ......)

# இலங்கை ஆசிரியர் சங்கத்தை கண்டிக்கின்றார் சந்திரகாந்தன்



இலங்கை ஆசிரியர் சங்கம் தன்மீதும் தனது கட்சியின் மீதும் ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ளமைக்கும் அறிவு, நாணயமற்ற வார்த்தைப்பிரயோகங்களை பயன்படுத்தியுள்ளமைக்கும் வன்மையான கண்டனங்களை தெரிவித்துக்கொள்கிறேன் என தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் சிவநேசதுரை சந்திரகாந்தன் விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளார். குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயத்தில் பணிபுரியும் உதயரூபன் ஆசிரியரை இடம் மாற்றக் கோரி கடந்த திங்கட்கிழமை குறித்த பாடசாலை முன்றிலில் ஓர் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளதாக எனக்கு அறியக்கிடைத்தது.

மேற்படி உதயரூபன் தனது பணி சார்ந்து இதுவரை 41 குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளவர் எனத் தெரியவருகின்றது. அதுமட்டுமன்றி, தனது இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் என்னும் தகைமையை அக்குற்றச்சாட்டுகளில் இருந்து தப்பிப்பதற்கான கேடயமாக அவர் பயன்படுத்தி வருகின்றாரா? என்னும் கேள்வி கல்விச்சமூகத்தைச் சேர்ந்த பலராலும் எழுப்பப்பட்டு வருகின்றது. அவர்மீது மாவட்டத்திலுள்ள கல்வித்திணைக்கள மேலதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலைதொடருகின்றது. இந்நிலையில்தான் உதயரூபன் ஆசிரியரை இடம்மாற்றக்கோரி மேற்படி ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது என நான் கருதுகின்றேன்.

அதன்காரணமாகவே பெற்றோர்களும், பழைய மாணவர்களும் பாடசாலையின் வளர்ச்சியில் அக்கறைகொண்டு செயற்படும் நலன்விரும்பிகளும் உதயரூபனை இடமாற்றக்கோரி பாடசாலை முன்பாக கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர் எனப் புரிந்துகொள்ள முடிகின்றது.

ஜனநாயக ரீதியான அந்த ஆர்ப்பாட்டத்தை எதிர்கொள்ளமுடியாத உதயரூபன் ஆசிரியர் குறித்த பிரச்சினைகள் மீது எவ்வித சம்பந்தமும் அற்ற என்னுடைய பெயரையும் எனது கட்சியின் பெயரையும் பயன்படுத்தி, விடயங்களை திசைதிருப்பி தன்மீதான குற்றச்சாட்டுகளில் இருந்து தப்பிக்க முயல்கிறார் என நான் கருதுகின்றேன்.

மேற்படி ஆர்ப்பாட்டம் தொடர்பாக உதயரூபன் ஆசிரியர் வழங்கிய தகவல்களின் அடிப்படையில்தான், இலங்கை ஆசிரியர் சங்கம்கூட உதயரூபன் ஆசிரியருக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தின் பின்னணியில் நானும் எனது கட்சியும் இருப்பதாக ஆதாரமற்ற குற்றஞ்சாட்டுக்களை முன்வைத்துள்ளது.

மேற்படி குற்றச்சாட்டுக்களை நான் முற்றாக மறுக்கின்ற அதேவேளை, உள்ளூர் உண்மை நிலைமைகளை அறிந்துகொள்ளாமல் எவ்வித ஆதாரமற்ற பொய்யான தகவல்களைக் கொண்டு ஒரு தேசிய ரீதியான ஆசிரியர் சங்கம் அறிக்கைகளை விடுவதென்பது பொறுப்பற்ற செயலாகும்.

அத்தோடு பல முறை மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு மக்கள் பிரதிநிதியை அவமரியாதைக்குள்ளாக் கும் வண்ணம் தெருச்சண்டை பாணியில் ஒரு தேசிய ஆசிரியர் சங்கம் தகாத வார்த்தைப்பிரயோகங்களைப் பயன்படுத்தி அறிக்கை விடுவதென்பது ஒரு மோசமான முன்னுதாரணமுமாகும்.

ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை என்மீதும் எனது கட்சியின் மீதும் சுமத்தியுள்ளமைக்கும் அறிவு, நாணயமற்ற வார்த்தைப்பிரயோகங்களை அந்த அறிக்கையில் பயன்படுத்தியுள்ளமைக்கும் இலங்கை ஆசிரியர் சங்கத்துக்கும் எனது வன்மையான கண்டனங்களைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். மேலும் என்னையும் நான் தலைமை தாங்கும் கட்சியின் நற்பெயரையும் கழுங்கப்படுத்தியமைக்காக உரிய சட்டநடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தீர்மானித்துள்ளேன். – எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கிளிநொச்சியில் கடத்தப்பட்ட ஹயஸ் நேற்று மீட்கப்பட்டது

(ந.லோகதயாளன்)

கிளிநொச்சி இரணைமடுச் சந்தியில் சேவிஸ்‘க்காக விடப்பட்ட ஹயஸ் வாகனத்தை சிறைச்சாலையில் உள்ள ஒருவர் கூலிக்கு ஆள் வைத்து கடத்திய நிலையில் வாகன உரிமையாளரால் கல்வயலில் உள்ள ஒரு வீட்டில் வைத்து 9 நாள்களின் பின்னர் கண்டு பிடிக்கப்பட்டது.

கிளிநொச்சி பாரதிபுரத்தில் வசிக்கும் ஒருவர் அறிவியல் நகருக்கும் இரணைமடுச் சந்திக்கும் இடையில் இருக்கும் சேவீஸ் நிலையத்தில் கடந்த 29 ஆம் திகதி ஒரு வானை சேவீஸ் செய்வதற்காக கொடுத்தவர் தனது இரண்டாவது வாகனம் மூலம் யாழ்ப்பாணத்துக்கு பயணிகளை ஏற்றி இறக்கும் பணிக்காக சென்றார். இதனால் நேரம் தாமதமானதால் சேவீஸ் நிலையத்துக்கு தொலைபேசியில் தகவல் வழங்கியுள்ளார்.

இதனை சேவீஸ் நிலைய உரிமையாளர் ஏற்றுக் கொண்டதால் மறுநாள் சென்று வாகனத்தை எடுக்க எண்ணியவருக்கு மாறுநாள் 30 ஆம் திகதி சேவீஸ் நிலைய உரிமையாளர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு உங்கள் வாகனத்தை யாரோ இருவர் வந்து எடுத்துச் சென்று விட்டனர் எனப் பதிலளித்திருந்தார். இதன் காரணமாக வாகன உரிமையாளர் நேரில் சென்று என்னை தொடர்பு கொண்டு கேட்காமல் எவ்வாறு வேறுயாரிடமும் ஒப்படைப்பீர்கள் என சேவீஸ் நிலையத்தில் வினாவியதோடு அங்கே இருந்த சீ.சீ.ரி.வி. கமராவை பார்வையிட்டுள்ளார்.

இதனபோது வாகனத்தை எடுத்துச்சென்றவர் சேவீஸ் நிலையத்தினருடன் தாம் பொலிஸார் எனக் கூறியே வாகனத்தை எடுத்துச் சென்றனர் என சேவீஸ் நிலையத்தினர் தெரிவித்திருந்தனர்.

இவை தொடர்பில் வாகன உரிமையாளர் மாங்குளம் பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவு செய்திருந்தார்.

இந்த முறைப்பாட்டின் பெயரில் மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வந்தனர்.

இருந்தபோதும் உரிமையாளரும் பல முயற்சிகளை மேற்கொண்டு 9 நாள்களின் பின்பு சாவகச்சேரி கல்வயலில் உள்ள வேதவனப் பிள்ளையார் ஆலயத்தை அண்டிய ஒரு வீட்டில் மறைத்து வைத்திருந்த சமயம் ஹயஸ் வாகன உரிமையாளர் மீட்டு மாங்குளம் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றார்.

இதேநேரம் வாகன உரிமையாளரின் பகைவர் தற்போது சிறையில் இருக்கும் நிலையில் அவரே ஆள் வைத்து வாகனத்தைக் கடத்தினார் எனக் கண்டறியப்பட்டுள்ளது.



# நுவரெலியா ஆற்றிலிருந்து பெண்ணின் சடலம் மீட்பு!

நுவரெலியா, ருவான் எலியா, பிளாக்பூல் ஆற்றில் விழுந்து உயிரிழந்த பெண்ணொருவரின் சடலம் நேற்று (புதன்கிழமை) காலை கண்டெடுக்கப்பட்டுள்ளதாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியா, ருவான் எலியா, பன்சல வீதியைச் சேர்ந்த 78 வயதுடைய புஞ்சிபண்டாரகே மெனிகாமி என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தனது மகள் மற்றும் மருமகன்களுடன் வீட்டில் தங்கியிருந்த நிலையில் இரவு உறங்கிக் கொண்டிருந்த தாய் காலையில் பார்க்கும் பொழுது வீட்டில் இல்லை என உயிரிழந்த பெண்ணின் மகள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு வீட்டுக்கு அருகில் உள்ள பிளாக்பூல் ஆற்றில் தவறி விழுந்த பெண் உயிரிழந்தமைக்கான காரணம் தொடர்பில் நுவரெலியா பொலிஸார் விசேட விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சடலம் சட்ட வைத்திய பரிசோதனைக்காக நுவரெலியா ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. நுவரெலியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சேர். பொன். இராமநாதனின் 91 ஆவது குருபூசை அனுஷ்டிப்பு

## யாழ். பல்கலையில் நடந்தது



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஸ்தாபகத்துக்கு அடித்தளமான பரமேஸ்வராக் கல்லூரியின் நிறுவனரும் சைவப் பெரு வள்ளலாருமான சேர். பொன் இராமநாதனின் 91ஆவது குருபூசை, நேற்று (புதன்கிழமை) காலை இடம்பெற்றது.

பல்கலைக்கழக வளாகத்தினுள் அமைந்துள்ள பரமேஸ்வரன் ஆலயத்தில் விசேட அபிஷேகம், பூஜையுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

பல்கலைக்கழகத்தினுள் அமைந்துள்ள சேர். பொன். இராமநாதனின் உருவச் சிலைக்கும் சபா மண்டபத்திலுள்ள உருவப்படத்துக்கும் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா மலர் மாலை அணிவித்து வணக்கம் செலுத்தினார்.

இந்த நிகழ்வில் சேர்.பொன் இராமநாதன் அறக்கட்டளையின் சார்பில் பேராசிரியர் சி.சிற்றம்பலம் மற்றும் முன்னாள் துணைவேந்தரும் பேரவை உறுப்பினருமான பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, பதிவாளர் வி.காண்டீபன், இந்து கற்கைகள் பீடத்தைச் சேர்ந்த முன்னாள் துறைத்தலைவர் பேராசிரியர் எம்.வேதநாதன், முன்னாள் கலைப்பீடாதிபதி பேராசிரியர் அ.சண்முகதாஸ், பேராசிரியர் திருமதி மனோன்மணி சண்முகதாஸ், பீடாதிபதிகள், துறைத் தலைவர்கள், விரிவுரையாளர்கள், ஊழியர் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

# ஆசிரியர்கள் முன்மாதிரியாக செயற்பட வேண்டும் வடக்கு மாகாண கல்வி அமைச்சு வலியுறுத்தல்

கொரோனா நோய்த்தொற்று பரவலைக் கட்டுப்படுத்தும் வகையில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவதில் ஆசிரியர்கள் முன்மாதிரியாகச் செயற்படவேண்டும் என்றுவடக்குமாகாணகல்விஅமைச்சுவலியுறுத்தியுள்ளது.

வடக்கு மாகாண பாடசாலைகளில் ஆசிரியர்கள் சிலர் முகக்கவசம் அணிவது உள்ளிட்ட சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவதில்லை என்று முறைப்பாடுகள் கிடைக்கின்றன.

முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியைப் பேணுதல், கைகளை சவக்காரம் இட்டுக் கழுவுதல் அல்லது தொற்று நீக்கியைப் பயன்படுத்தல் போன்ற சுகாதாரநடைமுறைகளைஉரியவகையில்பேணியவாறு பாடசாலைகளை மீள ஆரம்பிக்க சுகாதார அமைச்சால் கண்டிப்பான அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

எனவே, ஆசிரியர்கள் சுகாதார வழிகாட்டுதல்களை உரியவாறு கடைப்பிடிக்கும் போதுதான் மாணவர்களும் அவற்றைப் பின்பற்றுவார்கள். அதற்கான அறிவுறுத்தல்கள் அதிபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

கொரோனாத் நோய்த்தொற்றின் பரவல் தீவிரமடைந்துள்ளது என்று சுகாதார அமைச்சு அதிகாரிகள் தகவல் வழங்கியுள்ளனர். எனவே, சுகாதார நடைமுறைகளை உரிய வகையில் பின்பற்றுவதன் ஊடாகவே மாணவர்களின் கல்வி மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளைத் தொடர்ந்து கொண்டு செல்ல முடியும்.

அதேவேளை பொதுப் போக்குவரத்து சேவைகளில் பயணிக்கும் மாணவர்கள் முகக்கவசம் அணிவதை நடத்துநர்கள் கண்காணிக்கவேண்டும். அவை தொடர்பிலும் முறைப்பாடுகள் கிடைக்கின்றன.

பாடசாலைகளில் சுகாதார நடைமுறைகள் பின்பற்றுவதை உறுதி செய்ய கண்காணிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். – என்றும் வடக்கு மாகாண கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

# யாழ். துன்னாலைப் பகுதியில் கஞ்சா வைத்திருந்தவர் கைது!



யாழ்ப்பாணம் துன்னாலை பகுதியில் ஐஸ் மற்றும் கஞ்சா போதைப் பொருளுடன் இராணுவத்தினரால் ஒருவர் கைது செய்யப் பட்டுள்ளார்.

துன்னாலைப்பகுதியில் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபடுவதாக இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரக சிய தகவலையடுத்து அந்த இடத்துக்கு விரைந்த இராணுவத்தினர் சந்தேகநபரை கைது செய்துள்ளமையுடன், அவரிட மிருந்து ஒரு தொகை போதைப்பொரு ளையும் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரையும், அவரிடமிருந்து மீட்கப்பட்ட போதை பொருளையும் நெல்லியடி பொலிஸாரிடம், இராணுவத்தினரால் ஒப்படைக்கப்பட்ட நிலையில் மேலதிக விசாரணைகளை பொலி ஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பிரியந்தவைக் காப்பாற்ற முயன்றவரை கௌரவித்தார் பிரதமர் இம்ரான் கான்

பிரியந்த குமாரை காப்பாற்ற முயன்ற மாலிக் அட்னானுக்கு பிரதமர் இம்ரான் கான் பாராட்டுச் சான்றிதழை வழங்கியுள்ளார்.

மதத்தின் பெயரால் வன்முறையில் ஈடுபடுபவர்களை அரசாங்கம் விட்டுவைக்காது என்பதை வலியுறுத்தி, பிரியந்த குமாரை கொலை செய்யாமல் காப்பாற்ற முயன்ற மாலிக் அட்னானுக்கு, பிரதமர் இம்ரான் கான், பாராட்டுச் சான்றிதழை வழங்கியுள்ளார்.

பிரதமர் அலுவலகத்தில், இலங்கைப் பிரஜை பிரியந்த குமாரவுக்கு இரங்கல் தெரிவிக்கும்போது, மாலிக் அட்னானின் துணிச்சல் நம் அனைவருக்கும் ஓர் எடுத்துக் காட்டு என்று பிரதமர் கூறியுள்ளார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய பிரதமர், 'நாட்டில் முன்மாதிரிகள் முக்கியம், ஏனென்றால் மக்கள் அவர்களைப் பின்பற்றுகிறார்கள். உடல் சக்தியை விட தார்மீக சக்தி பெரியது.

மேலும் அந்த மிருகங்களுக்கு எதிராக மாலிக் அட்னான் நின்ற விதத்தை, நமது இளைஞர்கள் நினைவில் வைத்திருப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.



இதேவேளை, அவரது குடும்பம் அவரது மாதச் சம்பளத்தை தொடர்ந்து பெறும் என்று சியால்கோட்டின் வணிக சமூகம் என்னிடம் உறுதியளித்துள்ளது' என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# 3ஆவது டோஸ் தடுப்பூசி செலுத்தியோர் எண்ணிக்கை 10 இலட்சத்தைக் கடந்தது

இலங்கையில் பைஸர் மூன்றாம் கொரோனா தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்களின் மொத்த எண்ணிக்கை 10 லட்சத்தை கடந்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை பைஸர் மூன்றாம் தடுப்பூசி, 37 ஆயிரத்து 578 பேருக்கு செலுத்தப்பட்டதை தொடர்ந்தே இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும், 40 ஆயிரத்து 347 பேருக்கு கொரோனா தடுப்பூசிகள் செவ்வாய் மாத்திரம் செலுத்தப்பட்டுள்ளன எனவும் தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவு கூறியுள்ளது.

அந்தவகையில் 755 பேருக்கு பைஸர் முதலாம் தடுப்பூசியும் 313 பேருக்கு இரண்டாம் தடுப்பூசியும் 409 பேருக்கு சினோபோர்ம் முதலாம் தடுப்பூசியும் 1,238 பேருக்கு இரண்டாம் தடுப்பூசியும் செலுத்தப்பட்டுள்ளதாக தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

# நாடாளுமன்ற குழுநிலை விவாதங்களில் பேச கூட்டமைப்பு திட்டமிட்டு புறக்கணிக்கப்படுகிறது

## அதன் கொறடா சாள்ஸ் குற்றச்சாட்டு

குழுநிலை விவாதத்தை ஆரம்பித்து வைக்கும் எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் பெயர்ப் பட்டியலில் கூட்டமைப்பு திட்டமிட்டுப் புறக்கணிக்கப்படுவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சபையில் தெரிவித்தது.

நாடாளுமன்றில் பேசுவதற்கு எதிர்க்கட்சி தரப்பில் தமக்கு நேரம் ஒதுக்குவதில்லை என்ற குற்றச் சாட்டை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் சபையின் கவனத்திற்கு கொண்டுவந்தார்.

கூட்டமைப்பு இவ்வாறு புறக்கணிக்கப்பட்டுள்ளமை தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட பாரிய அநீதி என்றும் தமிழ் மக்களுக்கு இதனூடாக எதிர்க்கட்சித் தலைவர், அநீதி இழைத்துள்ளார் எனவும் ஆளும் தரப்பினர் குற்றம் சாட்டியுள்ளனர்.

வரவு - செலவுத் திட்ட குழு நிலை விவாதத்தை ஆரம்பித்து வைக்கும் எதிர்க்கட்சி எம்.பிக்களின் பெயர் பட்டியலை சபாநாயகருக்கு எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கையளித்துள்ளார்.

இந்தப் பட்டியலில் 33 நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் கூட்டமைப்பின் உறுப்பினர்களின் பெயர்கள் இதில் உள்வாங்கப்படவில்லை என சாள்ஸ் நிர்மலநாதன் குறிப்பிட்டார்.



கூட்டமைப்புக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் இல்லை என்பதால் எமது மக்கள் சார்ந்தப் பிரச்சினைகளை சபையில் பேச வேண்டும் எனவும் சாள்ஸ் நிர்மலநாதன் குறிப்பிட்டிருந்தார்.

# இலங்கை – போலந்து இடையே நேரடி விமானசேவைகள் ஆரம்பம்

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின் பின்னர் இடைநிறுத்தப்பட்டிருந்த இலங்கைக்கும் போலந்துக்கும் இடையிலான நேரடி விமான சேவைகள் நேற்று (புதன்கிழமை) முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

அந்தவகையில் லாட் போலிஷ் ஏர்லைன்ஸ், திங்கள், புதன் மற்றும் சனிக்கிழமைகளில் நாட்டுக்கு வரவுள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க விற்கும் இலங்கைக்கான போலந்து தூதுவர் பேராசிரியர் ஆடம் பரகூஸ்கிக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னரே நேரடி விமான சேவையை ஆரம்பிக்கத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக இலங்கைக்கான சேவைகளை நிறுத்தியிருந்த பல விமான சேவைகளும் மீண்டும் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகஅமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

# காணி திட்டமிடல் பயன்பாட்டுக் குழுக் கூட்டம் மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறப்பாக நடந்தது



மட்டக்களப்பு மாவட்ட காணி திட்டமிடல் பயன்பாட்டுக் குழுக்கூட்டம் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெற்றுள்ளது.

மாவட்ட காணி திட்டமிடல் பயன்பாட்டுக் குழுக்கூட்டம், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமாகிய கே.கருணாகரன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றுள்ளது.

இதன் போது பிரதேச செயலக ரீதியாக முன்வைக்கப்பட்டிருந்த 120 விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டமையுடன், பிரதேச செயலக ரீதியில் காணப்படுகின்ற அரச திணைக்களங்களுக்கான காணி ஆவணங்களைப் பெற்றுக்கொள்வது தொடர்பாகவும் பரிசீலனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதேவேளை பிரதேச மட்ட காணி பயன்பாட்டு குழுக் கூட்டங்களில் எடுக்கப்பட்ட சிபாரிசுகளின் அடிப்படையில் மாவட்ட பயன்பாட்டு குழு முன்னிலையில் முன்வைக்கப்பட்ட விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு சிபாரிசு வழங்கப்பட்டுள்ளது.

அதேபோன்று முதலீட்டாளர்களால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகளின் அடிப்படையில் குறுங்கால மற்றும் நீண்ட கால குத்தகைக்கு காணிகளை வழங்குவது தொடர்பாகவும், உள்ளூராட்சி மன்றங்களுக்கான சந்தை மற்றும் விளையாட்டு மைதானங்களுக்காக காணிகளை பாரதீனப்படுத்துதல் தொடர்பாகவும் அரசால் முன்னெடுக்கப்பட்டு வரும் இளம் தொழில் முயற்சியாளர்களுக்கு காணி வழங்குதல் தொடர்பாகவும் இதன்போது பரிசீலனை செய்யப்பட்டுள்ளதுடன் பல திட்டங்களுக்கு சிபாரிசுகளும் வழங்கப்பட்டுள்ளன.

மேலதிக மாவட்ட செயலாளர் நவரூபரஞ்ஜனி முகுந்தன் அவர்களது ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில், காணிப்பயன்பாட்டு திட்டமிடல் திணைக்கள மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பணிப்பாளர் எம்.ஏ.எஸ். கிறிசாந்தினி, மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் சசிகலா புண்ணியமூர்த்தி, பிரதேச செயலாளர்கள், காணி உத்தியோகத்தர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் உத்தியோகத்தர்கள், ஏனைய திணைக்களங்களின் அரச அதிகாரிகள் உள்ளிட்ட முதலீட்டாளர்களும் இதன்போது கலந்துகொண்டனர்.

# புவிச் சரிதவியல் திணைக்களத்தின் முகாமையாளராக 10 வருடத்துக்கு மேல் ஏன் ஒருவர் கடமையாற்றுகிறார்?

## கோவிந்தன் கருணாகரம் எம்.பி. கேள்வி



புவிச் சரிதவியல் திணைக்களத்தின் முகாமையாளராக மட்டக்களப்பு மாவட்டத்திலே 10 வருடங்களுக்கும் மேலாக ஒருவர் கடமையாற்றிக்கொண்டிருக்கின்றார். 10 வருடங்களுக்கும் மேலாக இருக்கும் ஒருவரை அமைச்சு ஏன் தொடர்ந்தும் வைத்திருக்கின்றது என்பது தொடர்பில் மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் சுற்றாடல் அமைச்சு தொடர்பில் கேள்வி ஒன்றை முன்வைத்தபோதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

மணல் அகழ்வு என்பது இந்த நாட்டில் பாரிய கொள்ளைச்சம்பவமாகவே இடம்பெறுகின்றது. அந்தவகையில் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து ஒரு நாளைக்கு 500 இற்கும் மேற்பட்ட லொறிகளில் மணல் மாவட்டத்தை விட்டு வெளியேறுவது மாத்திரமல்லாது ரயில் மூலமாகவும் மணல் மாவட்டத்தை விட்டு வெளியேறுகின்றது.

புவிச் சரிதவியல் திணைக்களத்தின் முகாமையாளராக மட்டக்களப்பு மாவட்டத்திலே 10 வருடங்களுக்கும் மேலாக ஒருவர் கடமையாற்றிக் கொண்டிருக்கின்றார். அரச திணைக்களங்களிலே உயர் அதிகாரிகள் கடமையாற்றும் போது 5 வருடங்களுக்கு ஒரு முறை சுழற்சி முறையில் அந்த அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்படுகின்றமையாக இந்தநாட்டின் வழமையாக இருக்கின்றது.

இந்தபுவிச்சரிதவியல் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட முகாமையாளர் எப்படி 10 வருடங்களுக்கும் மேலாக ஒரு மாவட்டத்திலே கடமையாற்றுகின்றார்? அரசியல்செல்வாக்குடன் அவர் கடமையாற்றுகின்றார் என்றால் அந்த அரசியல் செல்வாக்கை செலுத்துபவர்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் 10 இற்கும் மேற்பட்ட அனுமதிப்பத்திரங்களை வைத்திருக்கின்றனர்.

அந்த வகையில் புவி சரிதவியல் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட முகாமையாளராக 10 வருடங்களுக்கும் மேலாக இருக்கும் ஒருவரை நீங்கள் ஏன் தொடர்ந்தும் வைத்திருக்கின்றீர்கள் என்பது தொடர்பில் மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் நான் ஏற்கனவே உங்களிடம் கூறிய போது நீங்கள் விசாரித்து நடவடிக்கை எடுக்கிறேன் எனக் கூறியிருந்தீர்கள். ஆனால் இதுவரை இதுதொடர்பில் அங்கு எந்த வித முன்னேற்றமான நடவடிக்கையும் இடம்பெறவில்லை. எனவே, இது தொடர்பில் தீர்க்கமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். – என்றார்.

# முள்ளிவாய்க்கால் நினைவுதினம் அனுஷ்டித்த 10 பேருக்கும் பிணை

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை நடத்தினார்கள் என மட்டக்களப்பு கிரான் பகுதியில் கைதுசெய்யப்பட்ட 10 பேரும் நேற்று (புதன்கிழமை) பிணையில் விடுதலைசெய்யப்பட்டனர்.

கடந்த 2021ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் செய்வதற்கு எதிராக லவக்குமாருக்கு நீதிமன்ற தடை உத்தரவு பெறப்பட்ட நிலையில், அவர் உட்பட 10 பேர் அன்றைய தினம் நீதிமன்ற தடை உத்தரவை மீறி கல்குடா பொலிஸ் பிரிவிலுள்ள நாகர் வட்டை கடற்கரையில் முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களுக்கு தீபச் சுடர் ஏற்றி, கடலில் பூக்களைத் தூவி, அஞ்சலி செலுத்தி அதனை படம் எடுத்து முகநூலில் பதிவு செய்த நிலையில் அவர்களை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கல்குடா பொலிஸார் கைது செய்தனர்.

இது தொடர்பான வழக்கு வாழைச்சேனை நீதிவான் நீதிமன்றத்தில் நடைபெற்றது. வாழைச்சேனை மாவட்ட நீதிமன்ற நீதிபதி எம்.எச்.எம்.பசீல் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இவ்வாறு பிணை வழங்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கில் ஆஜராகிய சட்டத்தரணி க.சுகாஸ் விண்ணப்பித்த பிணை மனுவின் அடிப்படையில் 10 பேரும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

# விண்ணப்பம் கோரல்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் முதல் முறையாக தமிழ் மொழிக் கற்பித்தலில் சிறப்புக் கலைமாணி பட்டக்கற்கை நெறிக்கான 2022/2023 ஆம் கல்வியாண்டிற்குரிய விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரர்கள் www.ou.ac.lk என்னும் இணையத்தள முகவரியில் பிரவேசித்து 10.01.2022 வரை விண்ணப்பிக்க முடியும்.

அத்துடன் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் ஆங்கிலமொழிமற்றும்ஆங்கில இலக்கிய டிப்ளோமா (Diploma in English Language and Literature) கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் 18 வயதிற்கு மேற்பட்டவராக இருப்பதுடன் க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஒரே தடவையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை www.ou.ac.lk என்னும் இணையத்தள முகவரியில் பிரவேசித்து 12.01.2022 வரை விண்ணப்பிக்க முடியும்.

இவ் இரு விண்ணப்பப் படிவங்கள் தொடர்பான மேலதிக விவரங்களிற்கு யாழ்ப்பாண பிராந்திய நிலையம், பிறவுண்வீதி கொக்குவில் எனும் முகவரியூடாகவும் மற்றும் 021 - 2223374 தொலைபேசியூடாகவும் தொடர்புகொண்டு விண்ணப்பிக்க முடியும் என யாழ்ப்பாண பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

# இந்தியாவில் விடுதலையாகும் மீனவர்கள்; அமைச்சர் டக்ளஸ் கலந்துரையாடல்



வாழைச்சேனையில் இருந்து கடலுக்குச் சென்ற நிலையில் காணாமல் போயிருந்த நிலையில் இந்தியக் கடற்படையினரால் மீட்கப்பட்ட கடற்றொழிலாளர்களையும் படகையும் நாட்டுக்குக் கொண்டு வருவது தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட கடற்றொழிலாளர்களின் உறவினர்கள் மற்றும் படகு உரிமையாளர்கள் ஆகியோர் நேற்று (புதன்கிழமை) மாளிகாவத்தையில் அமைந்துள்ள கடற்றொழில் அமைச்சில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்துக் இந்த விடயம் தொடர்பாகக் கலந்துரையாடியுள்ளனர்

கடந்த 26 ஆம் திகதி செப்ரெம்பர் மாதம் வாழைச்சேனையில் இருந்து கடலுக்குச்சென்ற நான்கு கடற்றொழிலாளர்கள் காணாமல் போயிருந்த நிலையில், அந்தமான் தீவுப் பகுதியில் இந்திய கடற்படையினரால் மீட்கப்பட்டு தற்போது சென்னையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.


இந்நிலையில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தொடர்ச்சியாக மேற்கொண்ட முயற்சிகளையடுத்து இந்திய சட்ட ஏற்பாடுகளின் அடிப்படையில் எதிர்வரும் 14 ஆம் திகதி விடுதலை செய்யப்படவுள்ளனர்.

குறித்த நான்கு மீனவர்களையும் அவர்களின் படகையும் நாட்டுக்குக் கொண்டுவருவதற்கான ஏற்பாடுகள் தொடர்பாகவே இன்றைய சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டுள்ளன.

அதேவேளை, புத்தளம் கற்பிட்டிப் பிரதேசத்தில் சுருக்குவலை தொழிலில் ஈடுபடுகின்றவர்களுக்கான அனுமதியை வழங்குமாறு பிரதேச மீனவர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை நேற்று சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் கற்பிட்டிப் பிரதேசத்தைச் சேர்ந்த சுமார் 53 பேருக்கு சுருக்கு வலை அனுமதி வழங்கப்பட்டு வருவதாகவும், அதை விட சுமார் 120 பேர் சுருக்கு வலைக்கான அனுமதிகளை வழங்குமாறும் கோரிக்கை முன்வைத்தனர்.

இந்நிலையில், மீன்பிடித் தொழில் முறைகள் தொடர்பாக புதிய ஒழுங்கு விதிமுறைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன எனவும் அதுவரையில் தொழிலில் ஈடுபடுவது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் ஆராய்ந்த பின்னர் முடிவைத் தெரிவிப்பேன் எனவும் கடற்றொழில் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.12.2021 இல் வெளியிடப்பெற்றது.